இந்த பக்கத்தில்

- போக்குவரத்து கட்டுப்பாடுகள்
    - அவுஸ்திரேலிய போக்குவரத்துக் கட்டுபாடுகளில் சலுகைகளுக்கு விண்ணப்பித்தல் பற்றிய புதிய தகவல்கள்
    - சலுகைகள் வழங்கப்படும் துறைகள்
    - தனிபட்ட சலுகைகள்
    - பிரயாணத்துக்கான மனிதாபிமானதும் அத்தியாவசியமானதுமான காரணங்கள்
    - சலுகைக்காக இணையம் மூலம் விண்ணப்பித்தல்

# போக்குவரத்து கட்டுப்பாடுகள்

அவுஸ்திரேய சமூகத்தின் சுகாதார பாதுகாப்பையொட்டி அரசாங்கம் கடினமான எல்லைக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவுஸ்திரேலியாவுக்குள் வரவும் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறவும் மிகவும் கணிசமான விமான சேவைகளே அமுளில் உள்ளன. அதேவேளை உங்களால் விமான வழி பயணங்களை மேற்கொள்ள முடியாது. போக்குவரத்து கட்டுபாடுகள் மாறக்கூடியன. அடிக்கடி ஆராயுங்கள். பார்க்கவும்: தேசிய அமைச்சரவையின் ஊடக அறிக்கை.

அவுஸ்திரேலிய குடியுரிமைப் பெற்றோர் உட்பட அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் அனைவரும் அவர்கள் தரையிறங்கிய பிரதேசத்திலுள்ள ஹோட்டல் போன்ற நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் 14 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுதல் வேண்டும். பிரயாணிகளுக்கான கொரோனா வைரஸ் (COVID-19) பற்றிய அறிவுரைகளைப் பார்க்கவும். தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதற்கான செலவினை நீங்கள் ஏற்க நேரிடலாம். தனிமைப்படுத்தல் தேவைகள் பற்றி மேலும் அறிய உள் நாட்டு அல்லது உள்ளூராட்சி சுகாதார திணைக்களம் ஐத் தொடர்புகொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலிருக்கும் பயணக்கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் உங்களுக்கு விசேட சலுகையைப் பெற்றுக்கொண்ட ஒருவராக இல்லாத பட்சத்தில், உங்களால் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க இயலாது.

## அவுஸ்திரேலிய போக்குவரத்துக் கட்டுபாடுகளில் சலுகைகளுக்கு விண்ணப்பித்தல் பற்றிய புதிய தகவல்கள்

இணைய வசதிகொண்டு எம்மால் அமைக்கப்பெற்றுள்ள புதிய வலைத்தளத்தின் வாயிலாக சலுகைகளுக்காக விண்ணப்பித்தலும் அதேபோல விண்ணப்பித்த சலுகை விபரங்கள் பற்றிய புதிய விபரங்களை அறிந்துகொள்ளவும் இப்போது இலகுவாக்கப்பட்டுள்ளது. பயணக்

கட்டுப்பாடுகள் குறித்த சலுகைகளுக்கான வலைத்தளத்தில் உங்களுக்கு பல நன்மைகள் உண்டு. அவையாவன:

- பாவணையாளர்களுக்கு உபயோகிக்க இலகுவாக்கபட்டுள்ளது
- விண்ணப்பித்தலின் போது உடனடி ஆமோதிப்பு
- ஏதுவாக ஆவணங்களை இணைப்பதும் புதுப்பிப்பதும் இலகுவாகும்
- குழுவாகவோ குடும்பமாகவோ விண்ணப்பிக்கக்கூடிய வசதி
- உங்கள் விண்ணப்பம் குறித்த நிலைமையை ஆராயக்கூடிய வசதி
- முடிவுகள் எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அதுகுறித்து உடனடி விபரங்கள்.

குறிப்பிட்ட வலைத்தளம் பாவணைக்கு வந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி, 2020 வெள்ளிக்கிழமைக்கு முதல் விண்ணப்பித்தவராயின் உங்கள் விண்ணப்பங்களுக்கு அவுஸ்திரேலிய கிழக்கு நேரத்தின் படி ஜூலை மாதம் 31 ஆம் திகதி, 2020 பிற்பகல் 5 மணிக்குள் தீர்மானங்கள் எடுக்கப்படும். ஜூலை மாதம் 17 ஆம் திகதி, 2020 க்கு முதல் விண்ணப்பித்து இதுவரை பதில் ஏதும் பெறாதவர்கள், இன்னு மொருமுறை விண்ணப்பங்களை சமர்ப்பியுங்கள். அவை குறித்து நாங்கள் உங்களை தொடர்பு கொள்வோம்.

பயணச் சலுகைகளுக்கு விண்ணப்பித்தல்

## சலுகைகள் வழங்கப்படும் துறைகள்

நீங்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றை கொண்டிருப்பவராயின் எந்தவித கட்டுபாடுமின்றி அவுஸ்திரேலிய நாட்டுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை (சலுகைகளுக்கு விண்ணப்பிக்காமலே) சுயமாகவே பெறுவீர்கள்:

- அவுஸ்திரேலிய பிரஜை
- அவுஸ்திரேலிய நாட்டி நிரந்தர வதிவைப் பெற்றவர்
- அவுஸ்திரேலிய பிரஜையினதோ குடியுரிமைப் பெற்றவரினதோ நேரடிக் குடும்ப உறுப்பினர்
- அவுஸ்திரேலியாவில் வசிக்கும் நியூசிலாந்து பிரஜைகளும் அவர்களின் குடும்பத்தவர்களும்
- அவுஸ்திரேலியாவுக்குள் நியமனம் பெற்ற இராஜதந்திரிகள் (995 துணைப்பிரிவு வீசாவைக் கொண்டிருத்தல் அவசியம்)
- 72 மணித்தியாலங்களோ அதற்கும் குறைவான காலம் அவுஸ்திரேலியாவுக்குள் தரிக்கப்படும் பயணர்கள்
- விமானச் சேவை ஊழியரகள்
- மாலுமி உட்பட கப்பலில் பணிபுரியும் ஊழியர்கள்.
- அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பருவகால ஊழியர் நிகழ்ச்சித் திட்டம் அல்லது பசுபிக் தொழிலாளர் திட்டத்தின் வாயிலாக தொழிலில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்.

நீங்கள் அவுஸ்திரேலிய நாட்டுக்குள் பயணத்தை தொடரும்போது அதற்கான ஆதாரங்களை தன்னகம் வைத்திருத்தல் அவசியம். மேலதிய ஆதாரங்கள் கோரப்படலாம்.

## தனிபட்ட சலுகைகள்

நீங்கள் பின்வரும் குறிப்புகளுடன் தொடர்புப்பட்டவராயின் அவுஸ்தி ரேலிய நாட்டு எல்லைப் பாதுகாப்பு ஆணையாளர் உங்களுக்கு தனிப்பட்ட சலுகையை வழங்கலாம்:

- COVID-19 நிலைமைக்கு உதவும் முகமாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தினதோ பிராந்தியத்தினதோ எல்லை நிர்வாகிகளினதோ அழைப்பின் பேரில் வரும் அவுஸ்திரேலிய பிரஜை அல்லாதவர்
- வான்வழி நோயாளர் ஊர்தி, வைத்தியம் சார்ந்த வெளியேற்றங்கள் மற்றும் முக்கிய வைத்திய சேவை சார்ந்த வழங்கல்கள் போன்ற அத்தியாவசியமானதும் நிபுணத்துவம் வாய்ந்ததுமான வைத்திய சேவைகள்
- முக்கிய திறன்கள் கொண்ட அல்லது முக்கிய துறையில் பணிபுரியும் அவுஸ்திரேலிய பிரஜை அல்லாதவர்
- அவுஸ்திரேலிய அரசாங்கத்தினதோ பிராந்தியத்தினதோ எல்லை நிர்வாகிகளினதோ பரிந்துரையின் பேரின் தேசிய தேவையையொட்டி வருகைத்தரும் அவுஸ்திரேலிய பிரஜை அல்லாதவர்
- படையணி ஒப்பந்தம் தாங்கிய, பொதுநலவாய இராணுவம், ஆசிய பசுபிக் ஆயுத தாங்கிய இராணுவம் மற்றும் ஆயுதம் தாங்கிய இராணுவ ஒப்பந்தத்தின் பேரில் வருகைத்தரும் இராணும் வீரர்
- மனிதாபிமானதும் அத்தியாவசியமானதுமான காரணங்களுக்கான பிரயாணம்.

பயணக் கட்டுப்பாட்டுக்கான சலுகைக் குறித்த ஆவனத்தையும் வீசாவையும் நீங்கள் தன்னகம் வைத்திருத்தல் அவசியம். இணையம் வாயிலாக சலுகைகளுக்காக விண்ணப்பிக்கலாம். அதன்போது நீங்கள் போதுமான ஆதாரங்களை சமர்ப்பித்தல் அவசியமாகும். போதுமான ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் கோரிக்கைகள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். ஆங்கிலம் அல்லாத எல்லா ஆவனங்களும் உத்தியோகபூர்வமாக ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்திருத்தல் வேண்டும்.

**இரண்டு வாரங்களுக்கு குறையாததும் மூன்று மாதங்களுக்கு மேற்படாததுமான சலுகைக்கு நீங்கள முன்னரே விண்ணப்பித்தல் வேண்டும்.**

உங்கள் விண்ணப்பம் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:

- பயணிப்பவரின் தகவல்கள்: பெயர், பிறந்த திகதி, விசா வகை மற்றும் இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம்
- அவுஸ்திரேலியாவில் பரிந்துரைத்த முகவரியும் தொலைபேசி இலக்கமும்
- வருகைக்கான காரணம்: உங்களுக்கு சலுகை வழங்கப்பட வேண்டியமைக்கான காரணம்

- அதை ஆமோதிக்கும் கூற்று: குறிப்பிட்ட சலுகையை உங்கள் வசமுள்ள காரணம் அல்லது நியாயம்
- ஏதுவான ஆதாரங்கள்.

உங்களுக்கு சலுகை **கிடைக்காத** பட்சத்தில், உங்கள் பயணங்களை தொடர எத்தனிக்காதீர்கள். காரணம் அவுஸ்திரேலியாவை அடைய நீங்கள் விமானத்தில் ஏற அனுமதிக்கபட மாட்டீர்கள். சலுகை வழங்கப்படும் பட்சத்தில், குறிப்பிட்ட ஆதாரத்தை விமான நிலையத்திலும் தன்னகம் வைத்திருத்தல் அவசியம்.

## பிரயாணத்துக்கான மனிதாபிமானதும் அத்தியாவசியமானதுமான காரணங்கள்

உங்கள் பிரயாணத்துக்கு மனிதாபிமானதும் அத்தியாவசியமானதுமான காரணங்கள் இருப்பின் அவுஸ்திரேலிய நாட்டு எல்லைப் பாதுகாப்பு ஆணையாளர் உங்களுக்கு சலுகையை வழங்கலாம். பிரயாணத்துக்கான மனிதாபிமானதும் அத்தியாவசியமானதுமான காரணங்களாக உங்களின் குடும்ப அங்கத்தவர் ஒருவரின் மரணமோ தீவிர உடல்நலக் கோளாறோ இருக்கலாம்.

பயணக் கட்டுப்பாட்டுக்கான சலுகைக் குறித்த ஆவனத்தையும் வீசாவையும் நீங்கள் தன்னகம் வைத்திருத்தல் அவசியம். இணையம் வாயிலாக சலுகைகளுக்காக விண்ணப்பிக்கலாம். அதன்போது நீங்கள் போதுமான ஆதாரங்களை சமர்ப்பித்தல் அவசியமாகும். போதுமான ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் கோரிக்கைகள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். ஆங்கிலம் அல்லாத எல்லா ஆவனங்களும் உத்தியோகபூர்வமாக ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்திருத்தல் வேண்டும்.

**இரண்டு வாரங்களுக்கு குறையாததும் மூன்று மாதங்களுக்கு மேற்படாததுமான சலுகைக்கு நீங்கள முன்னரே விண்ணப்பித்தல் வேண்டும்.** உங்களின் குடும்ப அங்கத்தவர் ஒருவரின் மரணமோ தீவிர உடல்நலக் கோளாறு நீங்கள் சலுகைக்காக விண்ணப்பிப்பதற்கு காரணமாக இருக்கும் பட்சத்தில், குறிப்பிட்ட கால எல்லையை மீறி விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்களுக்கு சலுகை **கிடைக்காத** பட்சத்தில், உங்கள் பயணங்களை தொடர எத்தனிக்காதீர்கள். காரணம் அவுஸ்திரேலியாவை அடைய நீங்கள் விமானத்தில் ஏற அனுமதிக்கபட மாட்டீர்கள். சலுகை வழங்கப்படும் பட்சத்தில், குறிப்பிட்ட ஆதாரத்தை விமான நிலையத்திலும் தன்னகம் வைத்திருத்தல் அவசியம்.

## சலுகைக்காக இணையம் மூலம் விண்ணப்பித்தல்

**இரண்டு வாரங்களுக்கு குறையாததும் மூன்று மாதங்களுக்கு மேற்படாததுமான சலுகைக்கு நீங்கள முன்னரே விண்ணப்பித்தல் வேண்டும்.**

பயணச் சலுகைக்காக விண்ணப்பிக்கும் போது, உங்களிடம் வீசா இருத்தல் வேண்டும். போதுமான தகவல்களை வழங்குதல் வேண்டும். அதற்கான ஏனைய ஆவனங்களையும் வழங்குதல் வேண்டும். போதுமான ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் கோரிக்கைகள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பின்வருவனவற்றை கொண்டிருக்கலாம்:

- அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்
- உங்களிடம் செல்லுபடியான வீசா உள்ளதைக் காட்டும் ஆதாரம்
- பயண வழி விளக்கம்
- திருமண, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள்
- உறவு மற்றும் வதிவை உறுதிசெய்யும் ஆதாரணம் (பகிர்ந்த குடிபுகு ஒப்பந்தம், இணைந்த வங்கிக் கணக்கு என்பன)
- பயணத்தின் அவசியத்தை உறுதிசெய்ய வைத்தியரினதோ வைத்தியசாலையினதோ கடிதம்
- பயணத்தின் அவசியத்தை உறுதிசெய்ய தொழில் வழங்குனரின் கடிதம்
- உங்கள் திறன்களின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டும் வகையில் வியாபாரத்தினதோ அரச திணைக்களத்திடமிருந்து கடிதம்
- விண்ணபத்துக்கு வலுகொடுக்கும் சட்ட ரீதியான பிரகடனம்.

ஒரு பயணருக்காக ஒன்றுக்கும் மேற்பட்ட முறைகள் விண்ணப்பிப்பதை தவிருங்கள். அவ்வாறு செய்யும் பட்சத்தில் கடைசியாக அனுப்பப்பட்ட விண்ணப்பமே கருத்திற்கொள்ளப்படும்.

பயணச் சலுகை கிடைத்தமை என்பது அடுத்த விமானத்தால் உங்களுக்கு அவுஸ்திரேலியாவை என்ற உத்தர்வாதம் தருகிறது எனப் பொருள்படாது.

பயணச் சலுகைகளுக்கு விண்ணப்பித்தல்